Date:30.11.2022

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

OS.27/2018

வா.சா.1

**பெயர்-** திரு.ஆதிமூலம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

காத்தமூத்து, பாப்பாத்தியம்மாள் ஆகியோர் எனது பெற்றோர்கள் ஆவார்கள். பாப்பாத்தியம்மாள் 1970ஆம் ஆண்டும் காத்தமூத்தும், 1996ம் ஆண்டு காலமாகிவிட்டார்கள். வீரப்பன், கிருஷ்ணகவுண்டர்,மணவாளன், தனுஷ் ஆகியோர் எனது உடன் பிறந்த சகோதரர்கள். வெள்ளச்சி என்ற கோவிந்தம்மாள், தமையந்தி, பிருந்தாவதி ஆகியோர் எனது சகோதரிகள். எனது மனைவி கலுவம்மாள் இருக்கிறார். 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 2வது வாதி எனது பிள்ளைகள் ஆவார்கள். 3, 4 வாதிகள் எனது மகள்கள். காத்தமூத்துவிற்கு சுமார் 25ஏக்கர் சொத்துகள் இருந்தது. எனது தாத்தா பெயர் திருவேங்கடகவுண்டர். அவருக்கு 2 ஏக்கர் அளவில் சொத்துகள் இருந்தன. காத்தமுத்துவிற்கு 2 சகோதரர்கள். எனது தாத்தாவின் சொத்துகளை பாகம் வைத்து எனது அப்பா மற்றும் அவரது சகோதரர்களுக்கு தலா அரை காணி (60 சென்ட்) வீதம் சொத்தை பிரித்துகொடுத்தார். எனது அப்பாவிற்கு விவசாயமும், மாட்டுவண்டி வைத்து தொழிலும் செய்தார். காத்தமுத்துவின் 25 ஏக்கர் சொத்துகளை அவர் இறந்தபிறகு நானும் எனது சகோதர சகோதரிகளும் வாய்மொழி பாகம் செய்துகொண்டோம். சகோதரிகளுக்கு ஆளுக்கு 1 1/2 ஏக்கர் கொடுத்தோம். சகோதரர்கழுக்கு 3 1/2 ஏ்க்கர் வீதம் கிடைத்தது. அதனால் எனக்கு 3 1/2ஏக்கர் கிடைத்தது. அந்த சொத்து உள்ளது. அந்த சொத்தை நான் இந்த வழக்கில்

சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். வழக்குரை பட்டியலில் கண்ட சொத்துகளில் ‘எவை எவை எனக்கு பாகமாக கிடைத்த சொத்து என்று சொல்லமுடியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கில் எத்தனை அட்டவணை சொத்துகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. நானும் எனது மனைவியும் கிரையம் பெற்ற சொத்துகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. ஸ்ரீதர், கோபி, அய்யப்பன், பாலமுருகன் ஆகியோரில் யார் யார் சொத்து வாங்கினார்கள் என்றால் யாரும் வாங்கவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் எங்கள் சொத்துகள் மற்றும் வண்டி வாகனங்களை எடுத்துக்கொண்டார்கள், வீட்டை பூட்டி என்னை வெளியே துரத்தினார்கள். 22.10.2017ல் அவ்வாறு துரத்தினார்கள். நான் தற்சமயம் திருத்துரையூரில் இருக்கிறேன். நான் கோபியுடன் சேர்ந்து குடியிருக்கவில்லை. கோபியின் நிலத்தில் உள்ள வீட்டில் குடியிருக்கிறேன். அந்த நிலம் கோபியின் மாமனார் வாங்கிய சொத்து. திருத்துரையூர் கோபியின் மனைவி ஊர். கோபி திருமணம் ஆன பின்பும் என்னுடன் ‘ கொய்யாதோப்பில் இருந்தார். நானும், கோபியும் அவரது சகோதரர்களும் ஒரே வீட்டில் தான் குடியிருந்தோம் என்றால் சரிதான். நான்கு பாகமாக இருந்தது. நான்கு சகோதரர்களும் சேர்ந்து விவசாயம் செய்தார்கள் என்றால் இல்லை. எனது மூத்த மகன் ஸ்ரீதர் திருமணம் ஆன உடன் கோலியனூர் மாமனார் வீட்டிற்கு சென்றுவிட்டார். 2000ஆம் ஆண்டு ஸ்ரீதருக்கு திருமணம் ஆனது. அய்யப்பன், பாலமுருகன் ஆகியோர் திருமணம் ஆன பிறகு பூர்வீக வீட்டில் தான் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். 2ம் வாதி 2,3 பிரதிவாதிகள் சேர்ந்து சொத்துகள் வாங்கினார்களா என்றால் எல்லோரும் கும்பலாக வாங்கினார்கள். எல்லோரும் சேர்ந்து உழைத்து வந்த வருமானத்தில் சொத்து வாங்கினார்கள். 2002 ஆம் ஆண்டு குடும்பத்தில் 71சென்ட் நான் தான் அய்யப்பன், பாலமுருகன் பெயரில் வேலு என்பவரிடம் இருந்து ரூ.1,75,000/க்கு வாங்கினேன். எதற்காக அவர்கள் பெயரில் வாங்கினேன் என்றால் மீண்டும் பாகம் பிரித்தால் செலவாகும் என்பதால் அவர்கள் பெயரில் வாங்கினேன். அது பொதுகுடும்ப சொத்துதான். மீண்டும் 2002 ஆம் ஆண்டு 33சென்ட் நான்

தான் அய்யப்பன், பாலமுருகன் பெயரில் கண்ணுகவுண்டர் என்பவரிடம் இருந்து ரூ.53,000/க்கு வாங்கினேன். அதுவும் பொதுகுடும்ப சொத்து தான்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.